


புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2053 | ஆகஸ்டு 11, 2022 | புரட்சி 21 | முழக்கம் 30 | விலை: ரூ.3.00


# நிர்மலா சீதாராமனின் அவதூறுக்கு மறுப்பு

*விலைவாசி உயர்வு குறித்து விவாதிக்க மறுத்த காரணத்தால் ஒரு வார காலம் நாடாளுமன்றம் முடங்கியது. ஒரு வழியாக நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் பதிலளிக்க முன் வந்தார். பண வீக்கம் இருப்பதை ஒப்புக் கொண்ட அவர், ஒன்றிய ஆட்சியின் நிதி கொள்கையால் மாநிலங்கள் எந்த பாதிப்புக்கும் உள்ளாகவில்லை என்று சாதித்த தோடு, தி.மு.க. கொடுத்த வாக்குறுதிகளை நிறை வேற்றியதா என்று கட்சி அரசியலைப் பேசி தமிழ் நாட்டுக்கு சவால் விட்டார். இறுமாப்புடன் பேசிய நிர்மலா சீதாராமன் உரைக்கு பதிலளிக் கும் வகையில் 'இந்து' ஆங்கில நாளேட்டில் (ஆக.9) சேலம் தரணிதரன் (திராவிடத் தொழில் மன்ற இயக்குனர்) பதிலளித்து ஒரு கட்டுரை எழுதியுள்ளார். அதன் சுருக்கமான கருத்துகள்:*

- வரி விதிப்பில்கூட நேர்மை இருக்க வேண்டும்; குடும்பத்தினர் தாங்கக்கூடிய அளவில் இருக்கவேண்டும் என்று பொருளியல் அறிஞர் ஆடம் ஸ்மித் கூறினார். ஆனால் ஒன்றிய ஆட்சி தாங்க முடியாத அளவுக்கு மறைமுக வரியை உயர்த்தியுள்ளது. நாட்டின் மொத்த வருவாயில் விதிக்கப்பட்ட மறைமுகவரி 43 சதவீதத்திலிருந்து 2019இல் கூடுதலாக 50 சதவீதம் உயர்த்தப்பட்டது. பொருளாதாரம் மற்றும் மேம்பாட்டுக்கான அமைப்பின் உறுப்பு நாடுகள் மறைமுகவரியை சராசரி யாக 33 சதவீதத்துக்கு மேல் உயர்த்துவது இல்லை. மறைமுக வரிகள் ஏழை, பணக் காரர் இரு பிரிவினரையும் பாதிக்கக் கூடியது.
- இந்தியாவில் ஏழைகள் கடுமையாகப் பாதிக்கப்படுகிறார்கள். இந்தியர்களில் ஏழைகள் சராசரியாக தங்கள் வருவாயில் 22 சதவீதம் எரிவாயுவிற்காக செலவிட வேண்டி யிருக்கிறது. உலகிலேயே இது மிகவும் அதிகம். இது தவிர, டீசலுக்கு ஒன்றிய ஆட்சி 2014லிருந்து 800 சதவீதம் வரியை உயர்த்தி யிருக்கிறது. ஆனால் 300 சதவீதம் மட்டுமே வரிக் குறைப்பு செய்திருக்கிறது. ஏழைகள் மீது மறைமுக வரியை உயர்த்திவிட்டு கார்ப்ப ரேட்டுகளுக்கு நேரடி வரியை 35 சதவீதத் திலிருந்து 22 சதவீதமாக குறைத்திருக் கிறார்கள். இதனால் அரசுக்கு ஏற்பட்ட இழப்பு ரூ.2 இலட்சம் கோடி. மறைமுக வரி விதிப்பு நாட்டின் வளர்ச்சியைத் தடுப்ப தோடு, பெருமளவில் பண வீக்கத்தை வளர்த்து சமத்துவமற்ற நிலையை உருவாக்கி விடுகிறது. இது மீண்டும் வளர்ச்சியைத் தடுக்கிறது.
- (நிர்மலா ஒப்புக் கொண்ட) பணவீக்கத்துக்கு மற்றொரு காரணம் உணவுப் பொருள். அரிசி, பால் போன்றவற்றின் மீது விதிக்கப்பட்ட ஜி.எஸ்.டி. வரி.
- கடந்த சில ஆண்டுகளாக செல்வந்தர்கள் மேலும் செல்வந்தர்களாகி வருகிறார்கள். உலக அசமத்துவ அறிக்கை (World inequality Index) உலகிலேயே ஏழை - பணக்கார வேறுபாடு அதிகம் நிறைந்த நாடு இந்தியா என்று கூறுகிறது. மிக அதிகமான கடும் வறுமையில் வாழும் மக்களைக் கொண்டு உலகில் இரண்டாவது இடத்தில் இந்தியா இருப்பதாக உலக ஏழை நாடுகளுக்கான குறியீடு (World Poverty Clock) கூறுகிறது.
- இந்தியாவில் சில மாநிலங்களில் பணவீக்கம் சராசரியைவிட இரண்டு மடங்காக இருக்கிறது. ஆனால் தமிழ்நாடு, கேரளா இரண்டு மாநிலங்கள் மட்டும் இந்தியாவின் மோசமான பணவீக்கத்தைக் கட்டுப்படுத்து வதில் சாதனை படைத்துள்ளன.
- பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதில் இரண்டு அம்சங்கள் முக்கிய இடம் பெறு கின்றன. உணவு மற்றும் போக்குவரத்துகளில் செலவிடப்படும் கூடுதல் தொகை, பண வீக்கத்தில் முக்கிய பங்காற்றுகிறது. பண வீக்கத்தை கணக்கிடுவதில் இந்தப் புள்ளிகள் கவனத்தில் கொள்ளப்படுகின்றன. தமிழகத் தில் பின்பற்றப்படும் சிறப்பான உணவு வழங்கும் கட்டமைப்பு (Distribution System), பெண்களுக்கு இலவச பேருந்துப் பயணம், பண வீக்கத்தைக் கட்டுக்குள் வைத்துள்ளன. சமூக, பொருளாதார குறியீடுகளில் தமிழ் நாடு, கேரளா மாநிலங்கள் முன்னணியில் இருப்பதற்குக் காரணம் பட்டதாரிகள் எண்ணிக்கை உயர்வு; உழைப்புச் சந்தையில் பெண்களின் பங்கு ஆகியவையாகும். இதற்கான திட்டங்களை செயல்படுத்துவதில் தமிழ்நாடு முன்னணியில் நிற்கிறது.

இத்திட்டங்களுக்கு மாநிலங்களுக்கு நிதி அதிகாரம் தேவை. ஆனால் கடந்த சில ஆண்டு களாக தமிழ்நாடு திட்டமிட்டு புறக்கணிக்கப்படு கிறது.

வளர்ச்சி பெற்ற தமிழ்நாடு ஒன்றிய ஆட்சிக்கு வரியாக செலுத்தும் ஒரு ரூபாயில் தமிழ்நாட்டுக்கு ஒன்றியம் திருப்பி வழங்குவது 30 காசுகள் மட்டுமே. அதே நேரத்தில் உ.பி.க்கு 2 ரூபாயும், பீகாருக்கு 3 ரூபாயும் ஒன்றிய ஆட்சி வழங்குகிறது. தன்னிச்சையாக விதிக்கப்படும் 'செஸ்', 'சர்-சார்ஜ்' வரிகளில் மாநிலங்களுக்கு பங்கு கிடையாது. இந்த வரிகளை 2011-2012லிருந்து 2020-2021 வரை ஒன்றிய ஆட்சி இரு மடங்காக உயர்த்தி நிதியை தன்னிடம் மட்டுமே வைத்துக் கொண்டது. கூட்டாட்சி அமைப்பை சிதைக்கும் நிதிக் கொள்கையை ஒன்றிய அரசு மாற்றியமைக்க முன்வர வேண்டும்" என்று கட்டுரை கூறுகிறது. (தமிழில் 'இரா')

தமிழ்நாட்டை வஞ்சித்துக் கொண்டிருக்கும் தடைகளையும் மீறி தமிழ்நாடு ஒன்றிய ஆட்சி யின் மோசமான பொருளாதாரக் கொள்கை களிலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொண்டு வருகிறது. அதே நேரத்தில் பணவீக்கத்துக்குக் காரணமான வரி விதிப்புகளை அதிகரித்து கார்ப்பரேட்டுகளுக்கு ஏராளமாக தள்ளுபடி களையும் வரிவிலக்கையும் வாரி வழங்கி யிருக்கிறது.

இந்த நிலையில் மு.க.ஸ்டாலின் தலைமை யிலான தி.மு.க. ஆட்சியை நிர்மலா சீதாராமன் இறுமாப்புடன் குற்றம் சாட்டி சவால் விடுகிறார்.

# ஸ்ரீரங்கத்தில் பெரியார் அமர்ந்த வரலாறு

இந்து முன்னணி நடத்திய, இந்துக்களின் உரிமை மீட்பு பிரச்சார பயணத்தின் நிறைவு விழா, சென்னை மதுரவாயலில் சமீபத்தில் நடைபெற்றது. அதில் பேசிய சினிமா ஸ்டன்ட் மாஸ்டரும், இந்து முன்னணியின் கலை, இலக்கியப் பிரிவுச் செயலருமான கனல் கண்ணன், "ஸ்ரீரங்கநாதரை வழிபட ஒரு லட்சம் பேர் வருகின்றனர். கோயிலின் எதிரே, 'கடவுளே இல்லை' என்று சொன்னவரின் சிலை இருக்கிறது. அது என்றைக்கு உடைக்கப்படுகிறதோ, அன்றுதான் இந்துக்களின் எழுச்சி நாள்" என்றார். வெளிப்படையாக ஒரு சிலை உடைப்புக்கு அறைகூவல் விடுக்கும் இந்தப் பேச்சு பலரையும் இது அதிரவைத்தது. (காவல்துறை வழக்குப் பதிவு செய்தவுடன் தலைமறைவாகி, இப்போது முன்பிணை கேட்டிருக்கிறார்)

தமிழக பாஜக தலைவர் அண்ணாமலையோ, "இந்து மதத்திற்கு எதிராகத் தொடர்ந்து பேசிவரும் திமுகவினர், அதைக் கருத்து சுதந்திரம் என்கின்றனர். அதே கருத்து சுதந்திரம் கனல் கண்ணனுக்கும் உண்டு. எதிரே, ஈ.வே.ரா. சிலை இருக்க வேண்டுமா என்று அங்கு வரும் பக்தர்களிடம் கருத்துக் கணிப்பு நடத்தினால், 'வேண்டாம்' என்றுதான் சொல்வர். பொது இடங்களில் அவரது சிலையை வைத்துக்கொள்ளட்டும் என்றார். அடுத்து, தன் பங்குக்கு ஹெச்.ராஜாவும் கொளுத்திப் போட்டுள்ளார்.

ஸ்ரீரங்கத்தில் இதற்கு முன்னரும் இதே இடத்தில் வைக்கப்பட்ட பெரியார் சிலை 2006ஆம் வருடம் சில விஷமிகளால் உடைக்கப்பட்டது. அப்போது பாஜக இவ்வளவு சத்த பலத்துடன் இல்லை. இருப்பினும், அவர்களது சித்தாந்த சீடர்கள் தான் அந்த வேலையைச் செய்திருப்பார்கள் என்பதில் அன்றைக்கு யாருக்கும் சந்தேகம் இல்லை.

**ஸ்ரீரங்கமும் பெரியாரும் :** ஸ்ரீரங்கத்தில் பெரியார் சிலை அமைக்கப்பட்டதற்கே நீண்ட வரலாறு உண்டு. பெரும் காத்திருப்புக்குப் பின் அமைக்கப்பட்ட சிலை அது.

தமிழகத்தில் இரண்டாவது முறை திமுக கலைஞர் தலைமையில் ஆட்சியைப் பிடித்தவுடனேயே ஸ்ரீரங்கத்தில் பெரியார் சிலை வைப்பதற்காக திராவிடர் கழகம் முயற்சித்தது. 1973இல் ஸ்ரீரங்கம் நகராட்சியின் தலைவராக வெங்கட்ரமண தீட்சிதர் இருந்தார். பெரியாருக்கு சிலை வைப்பது தொடர்பாக அனுப்பப்பட்ட பரிந்துரையை அவர் தலைமையிலான ஸ்ரீரங்கம் நகராட்சி தீர்மானமாக நிறைவேற்றி பெரியார் சிலை வைப்பதற்கு நகராட்சிக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை என்று அரசுக்குத் தெரிவித்தது.

இதை அடுத்து மாவட்ட ஆட்சியரும் தனது பரிந்துரையை வழங்கினார். ஸ்ரீரங்கம் அம்மா மண்டபம் சாலையில் 144 சதுர அடி நிலம் ஒதுக்கப்பட்டது. தமிழ்நாடு அரசு சிலை வைப்பதற்கு அனுமதி வழங்கியது (அரசாணை எண்.162 தேதி 24.1.1973). 1975இல் ஒதுக்கிடுசெய்யப்பட்ட இடம் திராவிடர் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டது. இருப்பினும் 1.2.1976 அன்று திமுக அரசு டிஸ்மிஸ் செய்யப் பட்டதனால் தமிழ்நாட்டில் முழுமையாக நெருக்கடி நிலைமை நடைமுறைப் படுத்தப்பட்டது. நெருக்கடி நிலைமை விலக்கப்பட்ட பிறகும் அதில் முழுமையாகப் பாதிக்கப்பட்ட திமுக எதிர்கட்சியாகவே செயல்பட நேர்ந்தது. இடையில் 1996 முதல் 2001 வரை திமுக பதவிக்கு வந்தாலும்கூட இந்தக் கோரிக்கை கிடப்பிலேயே கிடந்தது.

மீண்டும் 2006இல் திமுக ஆட்சிப் பொறுப்பேற்ற காலகட்டத்தில்தான் ஸ்ரீரங்கத்தில் பெரியார் சிலை அமைக்கப்படுவதற்கான வேளை வந்தது. 24.12.2006 அன்று சிலை திறப்பு விழாவிற்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டவுடன் பெரியார் சிலையும் பீடத்தின் மேல் வைக்கப்பட்டு, திறப்பு விழாவுக்காக மூடிவைக்கப்பட் டிருந்தது. ஆனால், 7.12.2006 அன்று, சமூக விரோதிகள் சிலரால் சிலை உடைக்கப் பட்டது. பெரியார் தொண்டர்கள் அசரவில்லை. திராவிடர் கழகத் தலைவர் வீரமணி 9.12.2006 அன்று தன்னிடம் இருப்பிலிருந்த புதிய சிலை ஒன்றை அதே பீடத்தில் நிறுவச் சொல்ல திட்டமிட்டபடி சிலை திறப்பு விழாவும் நடந்தேறியது.

பெரியார் சிலைக்கு 1973ஆம் வருடமே அரசாணை இருப்பினும் அதை எதிர்த்து வழக்கொன்றை சிவசேனா கட்சியின் மாநிலச் செயலாளர் கிருஷ்ணமூர்த்தி உயர் நீதிமன்றத்தின் மதுரைக் கிளையில் தொடர்ந்தார் (6.2.2006). ஆனால், அவர்கள் எதிர்பார்த்த இடைக்கால உத்தரவு கிடைக்கவில்லை. எனவே, இந்தத் தகவலை மறைத்து சட்ட விரோதமாக சென்னை உயர் நீதிமன்றத்தின் முதன்மை அமர்வில் வேறொரு வழக்கின் மூலம் தடை உத்தரவு பெற முயற்சி செய்யப்பட்டது. ஏற்கனவே மதுரையில் வழக்கு தொடுத்த அதே நபர் மறுபடியும் சென்னையில் பொதுநல வழக்கொன்றைத் தாக்கல் செய்தார். அந்த வழக்கு தலைமை நீதிபதி ஏ.பி.ஷா, நீதிபதி கே.சந்துரு தலைமையிலான டிவிஷன் பெஞ்ச் முன் விசாரணைக்கு வந்தது.

(4ஆம் பக்கம்)

### தலையங்கம்

## இது ‘சுதந்திர’ நாடா?

*75ஆவது சுதந்திர தினத்தை திருவிழாவாக்கி, அந்த விழாவையும் தங்கள் ஆட்சிக்கு பெருமை சேர்க்கத் துடிக்கும் ஆட்சி, உண்மையான ஒரு சுதந்திர நாட்டுக்கான ஆட்சியைத்தான் நடத்துகிறதா என்ற கேள்வியை எழுப்ப வேண்டியிருக்கிறது. முதல் கேள்வி இந்தியா மாநிலங்களின் ஒன்றியம் என்று அரசியல் சட்டத்தில் வரையறுக்கப்பட்ட நிலையில் மாநில உரிமைகளை ஒன்றிய ஆட்சி அங்கீகரிக்கிறதா?*

*காஷ்மீர் என்ற மாநிலத்தையே அழித்து யூனியன் பிரதேசமாக்கிவிட்டது. மாநிலப் பட்டியலில் வழங்கப் பட்டுள்ள அதிகாரங்களான கல்வி, வரிவிதிப்பு, விவசாயப் பொருள்களை சந்தைப்படுத்துதல், மின்சாரம் போன்ற துறைகளை ஒன்றிய ஆட்சி பறித்துக் கொண்டு மாநிலங்கள் மீது தனது ‘ஒற்றை பாரதம்’ கொள்கையைத் திணிக்கிறது.*

*மொழி வழியாகப் பிரிக்கப்பட்ட மாநிலங்களை ‘பாரதிய தேசியமாக்க’ சமஸ்கிருதப் பண்பாடுகள் கீதை, வேதம், ராமன் கோயில்களை குறியீடுகளாக்கி மாநில மொழி இன அடையாளங்களை ‘சனாதன தர்ம’ வட்டத்துக்குள் மூழ்கச் செய்கிறது.*

*மாநிலங்களைக் கலந்து ஆலோசித்து திட்டங்களையும் நிதியையும் ஒதுக்குவதற்கு உருவாக்கப்பட்டது தான் திட்டக் குழு. அதைக் கலைத்து விட்டு ‘நிதி அயோக்’ என்ற அமைப்பை உருவாக்கி விட்டனர். தன்னிச்சையாக செயல்படும் அதிகாரங்களைப் பெற்ற தேர்தல் ஆணையம், சி.பி.அய்., அமலாக்கத் துறை–வருமான வரித் துறைகள் ஆளும் கட்சியின் அரசியலுக்கு ஒரு சார்பாகப் பயன் படுத்தப்படுகிறது.*

*சுதந்திர நாட்டின் மற்றொரு அடையாளம் ஜனநாய கத்தைப் பாதுகாப்பது ஆகும். அது சமூக ஜனநாய கத்தையும் உள்ளடக்கியது. ஆனால் இந்தியாவின் அனைத்து மாநிலங்களும் சமச்சீராக வளர்ச்சிப் பெற விடாமல் ஒன்றிய அதிகாரம் கட்சி நலனுக்கேற்ப பாகுபாடு காட்டுகிறது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சிகளை ‘குதிரை பேரம்’ மற்றும் ஆளுநர் அதிகாரத்தைப் பயன்படுத்தி கவிழ்த்து, தங்களது ஆட்சிகளாக மாற்றிக் கொண்டு விடுகிறார்கள்.*

*‘மனித வள மேம்பாடு’ என்பதே உண்மையான சுதந்திரத்தின் அளவுகோல்; எல்லைகளில் சீனா, பாகிஸ்தான் போன்ற நாடுகளோடு முரண்பாடுகளை வளர்ப்பதும் அதற்காக இராணுவத்துக்கு பெருமளவில் நிதியை ஒதுக்குவதும் எதிரிகளிடமிருந்து நாட்டைக் காப்பாற்றி வருகிறோம் என்ற ‘தேசபக்தி’ உணர்வைத் தூண்டி விடுவதும் சுதந்திரத்தின் அடையாளமாகி விட முடியாது. தேர்தலில் வாக்குகளைக் குவிக்கவும், மக்களை அடிப்படைப் பிரச்சினைகளிலிருந்து திசை திருப்பவும் ‘தேச பக்தியை’ அதுவும் ‘இந்துராஷ்டிர தேசபக்தியை’ ஒரு கருவியாகப் பயன்படுத்துவது, மனித வள மேம்பாட்டுக்கு உதவாது. சொல்லப்போனால் தேச பக்தியும் விற்பனை சரக்காக மாற்றப்பட்டுவிட்டது*

*அரசுத் துறை நிறுவனங்களை முறைகேடாகப் பன்னாட்டு நிறுவனங்களுக்கு விற்பது, ஒரு நாட்டின் தொழில் கட்டமைப்பை சிதைப்பதாகும். நாட்டின் பொருளா தாரத்தை பெரும் தொழிலதிபர்கள் நிர்ணயித்துக் கொள்வதற்கு அதிகாரமளிப்பது எப்படி ஒரு சுதந்திர நாட்டுக்கான அடையாளமாக இருக்க முடியும்?*

*இவ்வளவு தடைகளையும் எதிர்கொண்டு மனித வள மேம்பாட்டில் இந்தியாவில் தமிழ்நாடு, கேரளா மாநிலங்கள் ஒப்பீட்டளவில் வளர்ச்சியைப் பதிவு செய் திருப்பதை ‘இந்து’ ஆங்கில நாளேட்டில் (ஆகஸ்ட் 8) வெளி வந்த ஒரு கட்டுரை சுட்டிக்காட்டியுள்ளது. தமிழ்நாட்டிலும் கேரளா விலும் நடந்த சமூக மாற்றங்களே இதை சாத்தியப்படுத்தி யிருக்கின்றன என்று அக்கட்டுரை கூறுகிறது* (The superior human development indicators of Tamilnadu and Kerala have followed this **Social Transformation**) *என்று அசோகா பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் குறிப்பிடுகிறார். ஆனாலும் ஜாதிப் பிரச்சினை, பெண்கள் மீதான கொடுமைகள் இந்த மாநிலங்களில் இருப்பதையும் சுட்டிக் காட்டுகிறார்.*

*கல்வி உரிமை மற்றும் பெண்களை அதிகாரப் படுத்துதலில் இந்தியாவுக்கே தமிழ்நாடு வழிகாட்டும் திட்டங்களை செயல்படுத்தி வருவது மறுக்க முடியாத உண்மை. விளிம்பு நிலை மக்களை அதிகாரமயமாக்கி அவர்களை சுயமரியாதை வாழ்க்கையோடு பிணைத்து வைக்கும் அரசின் திட்டங்களை ‘இலவசங்கள்’ என்றும் அது வழங்கப்படக் கூடாது என்றும் பிரதமர் மோடி பேசி வருவதோடு உச்சநீதிமன்றமும் அடித்தட்டு மக்களின் வாழ்நிலை பற்றிய புரிதல் இன்றி தன்னிச்சையாக இலவச ஒழிப்பதற்கான ஆலோசனைக் குழுக்களை நியமிப்பது சுதந்திரத்தை மேலும் பின்னோக்கி இழுத்துச் செல்லவே பயன்படும். பன்னாட்டு நிறுவனங்களுக்கு அரசின் நிதி பல்லாயிரம் கோடியில் ‘தள்ளுபடி’, ‘வரிச் சலுகை’, ‘உற்பத்தி ஊக்குவிப்பு’ என்று வாரி வழங்குவது ‘மோடி இராஜ்யத்தில்’ இலவசங்கள் என்ற பட்டியலில் இடம் பெறாதா? இலவசங்கள் தான் இவர்கள் கண்களை உறுத்துமா? என்ற கேள்வியோடுதான் 75ஆவது சுதந்திர தினத்தின் கொடி இந்தியாவில் பறக்கப் போகிறது!*

# 2ஜி ஊழல் என்றால் ‘5ஜி’ என்ன மோடி ‘ஜீ’?

*அதிவேக இணைய சேவைகளை வழங்குவது 5ஜி அலைக்கற்றை. இதற்கான ஏலம் ஒருவாரமாக நடந்தது. இதன் மூலமாக அரசுக்கு 4.3 இலட்சம் கோடி ரூபாய் வருமானம் வரும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் ஏலம் போனது 1.5 இலட்சம் கோடி ரூபாய்க்கு மட்டும் தான். மிகப்பெரும் இழப்பு அரசுக்கு ஏற்பட்டது. இது எப்படி நிகழ்ந்தது ?*

*பாரதி ஏர்டெல், ரிலையன்ஸ் ஜியோ, அய்டியா, அதானி ஆகிய பெரும் குழுமங்கள் தங்களுக்குள் கூட்டணி அமைத்துக் கொண்டு, ஏலத்தொகை உயராமல் பார்த்துக் கொண்டன. இதற்கு ஒன்றிய ஆட்சி துணை போனது என்ற குற்றச்சாட்டுகள் இணையதளத்தில் வந்து கொண்டு இருக்கின்றன. மற்றொரு செய்தியையும் இதனுடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும் ;*

*2010ஆம் ஆண்டு ஒன்றிய அமைச்சரவையில் ஆ.இராசா தகவல் தொடர்புத்துறை அமைச்சராக இருந்த போது 2ஜி அலைக்கற்றைக்கான ஏலம் நடைபெற்றது. அப்போது 1 இலட்சத்து 76ஆயிரம் கோடி ருபாய் அரசுக்கு இழப்பு ஏற்பட்டு விட்டது என்று தணிக்கைக் குழு தலைவராக இருந்த வினோத் ராய் குற்றம் சாட்டினார். அதைத் தொடர்ந்து நாடாளுமன்றத்தையே நடத்த விடாமல் பாரதிய ஜனதா கட்சி பல நாட்கள் முடக்கி போட்டது ; ஏடுகள் கூக்குரல்கள் போட்டன ; இராசா கைது செய்யப்பட்டார். இதற்காக அமைக்கப்பட்ட சிறப்பு நீதிமன்றம் விசாரணை நடத்தியது.*

*ஆ.இராசா தனக்கான வழக்கறிஞராக தானே வாதாடினார். விசாரித்த நிதிமன்றம் ‘இந்தக் குற்றச்சாட்டில் ஒரு ஆதாரமாவது கிடைக்காதா என்று ஒவ்வொரு நாளும் எதிர்பார்த்திருந்தேன் ஒரு ஆதாரமும் கிடைக்கவில்லை, இது ஆதாரமற்ற குற்றச்சாட்டு’ என்று கூறி தள்ளுபடி செய்தது.*

*தவறான தகவலை நீதிமன்றத்தில் தந்ததற்காக வினோத் ராய் நீதிமன்றத்தில் மன்னிப்புக் கேட்டார்.*

*அலைக்கற்றை மதிப்பு ரூ.4.3 லட்சம் கோடி என்று கூறப்பட்டது. ஜியோ, ஏர்டெல், வோடஃபோன் ஐடியா, அதானி டேட்டா நெட்வொர்க் ஆகிய நிறுவனங்கள் இந்த ஏலத்தில் பங்கேற்றன. தற்போது மொத்தமாக 51,236 மெகாஹெர்ட்ஸ் அலைக்கற்றை ரூ.1.5 லட்சம் கோடிக்கு ஏலம் போயிருக்கிறது.*

*ஜியோதான் அதிகபட்ச அளவில் ஏலம் எடுத்துள்ளது. மொத்தமாக, ஜியோ ரூ.88,078 கோடிக்கு ஏலம் எடுத்துள்ளது. ஏர்டெல் ரூ.43,084 கோடிக்கும், வோடாஃபோன், அய்டியா ரூ.18,799 கோடிக்கும், அதானி டேட்டா நெட்வொர்க் ரூ 212 கோடிக்கும் 5ஜி அலைக்கற்றையை ஏலம் எடுத்துள்ளன.*

*2ஜி அலைக்கற்றைக்கே 2010ஆம் ஆண்டில் 1 இலட்சத்து 76 ஆயிரம் கோடி ரூபாய் இழப்பீடு ஏற்பட்டு விட்டது என்று கூக்குரல்கள் போட்டார்கள், இன்றைக்கு 5ஜி அலைக்கற்றையின் மொத்த வருவாயே 1.5 இலட்சம் கோடி தான். ஆனால், ஏடுகள், ஊடகங்கள் கள்ள மவுனம் சாதித்துக் கொண்டிருக்கின்றன. ஏன் இந்த கள்ள மவுனம் ?*

# மாட்டிறைச்சி உணவு கடைக்கு சீல்: கழகம் கண்டன ஆர்ப்பாட்டம்




*சேலத்தில் மாட்டிறைச்சி உணவு கடைக்கு சீல் வைத்த சேலம் மாவட்ட வருவாய்த் துறை, மாநகராட்சி, காவல்துறை ஆகியவற்றை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் ஒருங்கிணைப்பில் முற்போக்கு இயக்கங்கள் இணைந்து 05.08.2022 வெள்ளி காலை 10 மணியளவில் சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் முன்பாக நடை பெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு விசிகவின் மாநகர மாவட்டப் பொருளாளர் காஜா மொய்தீன் தலைமை தாங்கினார்.*

*இந்து முன்னணியின் கைப்பாவையாக மாறிப்போன சேலம் வருவாய்த்துறை மற்றும் மாநகராட்சி, காவல்துறை ஆகியவற்றின் அராஜகப் போக்கை கண்டித்து ஆர்பாட்டத்தில் கண்டன முழக்கங்கள் எழுப்பப்பட்டன. அதனைத் தொடர்ந்து முற்போக்கு இயக்கங்களின் பொறுப்பாளர்கள் தங்களது கண்டன உரைகளை பதிவு செய்தனர்.*

*விசிக மண்டல அமைப்புச் செயலாளர் நாவரசன் -* CPI (M) *மாவட்டச் செயலாளர் சண்முகராஜா - தமுமுக பொறுப்புக்குழுத் தலைவர் முகமது ரபீக் -* PFI *மாவட்டத் தலைவர் பைரோஸ்கான் -* SDPI *பொதுச் செயலாளர் ஷெரிப் பாஷா -* CPI *மாவட்டச் செயலாளர் மோகன் ஆகியோர் கண்டன உரையாற்றினார்கள்.*

*கழகத் தலைவர் கொளத்தூர் மணி தம் நிறைவுரையில், “மாட்டிறைச்சி கடைக்கு சீல் வைக்க காரணமாக இருந்த இந்து முன்னணியினருக்கு மாட்டிறைச்சிக் கடை இருக்கக் கூடாது என்று சொல்லும் உங்கள் பி.ஜே.பி. ஆட்சியில்தான் மாட்டிறைச்சியை ஏற்றுமதி செய்யும் இந்தியாவின் முன்னணி நிறுவனங்களை முஸ்லிம்கள் பெயரில் நடத்துபவர்கள் பார்ப்பனர்கள்தாம் என்றும், குறிப்பாக* BJP *சட்டமன்ற உறுப்பினரே மாட்டிறைச்சியை ஏற்றுமதி செய்யும் நிறுவனம் நடத்தி வருகிறார்” என்கின்ற தகவல்களை குறிப்பிட்டு உரையாற்றினார். முடிவில் விசிக வடக்கு தொகுதி துணைச் செயலாளர் ஹுமாயூன் நன்றியுரையாற்றினார்.*

*கண்டன ஆர்ப்பாட்டத்தில் சேலம், இளம்பிள்ளை, ஏற்காடு, நங்கவள்ளி, மேட்டூர், மேட்டூர்* RS, *கொளத்தூர் ஆகிய பகுதிகளில் இருந்து திராவிடர் விடுதலைக் கழகப் பொறுப்பாளர்களும், தோழர்களும் கலந்து கொண்டனர்.*

# முகலாயர்களை அண்டிப் பிழைத்த உயர்ஜாதி ‘பார்ப்பனியம்’

***இராமராஜ்ஜிய கனவோடு மதவெறியைத் திணித்துவரும் இந்துத்துவா அமைப்புகள், இந்தியாவின் சிறுபான்மை மதத்தினருக்கு எதிராக, இஸ்லாமியர்களுக்கு எதிராக பரப்பும் அவதூறுகள், நிகழ்த்தும் வன்முறைகள் அளவற்றது. அதில் ஒன்றுதான் முகலாய மன்னர்கள் காலத்தில் இந்துக்கோயில்கள் இடிக்கப்பட்டு, இந்துக்கள் கொல்லப்பட்டு ரத்த ஆறு ஓடியதைப் போல பரப்பப்படும் அவதூறு. அதற்கு மாறாக, வேதகால ஆட்சியில் பாலாறும், தேனாறும் ஓடியதாகவும், அந்த பண்பாடு, கலாசாரத்தை மீட்டெடுக்க வேண்டுமென்றும் பேசி வருகிறார்கள். இரண்டிலும் உள்ள உண்மை என்பது குறித்து “ஃபிரன்ட்லைன்” இதழில் சாம்சுல் இஸ்லாம் என்பவர் எழுதிய ஆய்வுக் கட்டுரையின் தமிழாக்க முதல்பகுதி கடந்த வார இதழில் வெளியிடப்பட்டது. அதன் இரண்டாவது மற்றும் நிறைவுப்பகுதி இதோ...***

பவுத்தர்களைக் கொன்று, பவுத்த மற்றும் ஜைன வழிபாட்டு தலங்களை அழித்தொழிக்கும் பணிகளில் புஷ்யமித்ர சுங்கன் ஈடுபட்டார். திவ்யவதனா என்ற பவுத்த சமஸ்கிருத ஆவணத்தில் இதற்கு சான்றுகள் இருப்பதாக வரலாற்று ஆய்வாளர் டி.என்.ஜா குறிப்பிடுகிறார். இதுதொடர்பாக 2018ஆம் ஆண்டில் அவர் எழுதிய கட்டுரைத் தொகுப்பில், “புஷ்யமித்ர சுங்கன் பெரும் படையைத் திரட்டிச்சென்று பவுத்த தூபிகளை அழித்தார். மடங்களை எரித்தார். சகலா வரை சென்று (தற்போதைய சியால்கோட்) துறவிகளை கொன்றார். வேதங்களை எதிர்ப்போரின் தலையை வெட்டி வரச்சொல்லி 100 தினார்களை பரிசாக அறிவித்தார்” எனக் குறிப்பிட்டுள்ளார்.

பார்ப்பனர்களும் வேதத்தை எதிர்த்தவர் களும் தீவிர எதிராளிகளாக இருந்தனர் என மகாபாஷ்யத்தில் பதஞ்சலி கூறியிருப்பதையும் டி.என்.ஜா சுட்டிக்காட்டுகிறார். இந்த கட்டுரைத் தொகுப்பு 2018ஆம் ஆண்டு கேரவன் இதழில் “பண்டைய புத்த தளங்களின் அழிவு” என்ற தலைப்பில் வெளியாகியுள்ளது. இந்துத்துவ பரப்புரைகள் அனைத்தும் சீக்கிய குருக்கள் மற்றும் அவர்களை பின்பற்றியவர்கள் முகலாய ஆட்சியாளர்களால் துன்புறுத்தப்பட்டதாக, இன்றைய முஸ்லிம்களுக்கு எதிராக வெறுப்பைப் பரப்ப பயன்படுத்தப்படுகிறது.

1704-இல் நடைபெற்ற ஆனந்த்பூர் சாஹிப் பின் கடைசி முற்றுகை குறித்து www.sikhdharma.org/4-sons-of-guru-gobind-singh/ என்ற வலைப் பக்கத்தில் முக்கியத் தகவல்கள் இடம் பெற்றுள்ளன. இறுதிகட்ட மோதலின்போது முஸ்லிம் மற்றும் இந்து மலை மன்னர்கள் நகரத்தை முழுவதுமாக சுற்றிவளைத்து துண்டித் தனர். சீக்கியர்கள் முகலாய படையெடுப்பாளர் களிடமிருந்து தப்பிக்க முயன்றபோது, குரு கோவிந்த் சிங்கின் இளைய மகன்களான பாபா ஜோராவர் சிங் (9), மற்றும் பாபா ஃபதே சிங் (7) ஆகியோர் குழப்பத்தால் குழுவிலிருந்து பிரிக்கப் பட்டனர்.

கோவிந்த் சிங்கின் தாயாரான குஜ்ரியுடன் அவர்கள் கரடு முரடான காட்டில் நடந்துச் சென்று ஒரு சிறு கிராமத்தில் தஞ்சமடைந்தனர். அவர்களின் இருப்பிடத்தை அறிந்து கோவிந்த் சிங்கின் வீட்டில் சமையல் பணிகளை கவனித்து வந்த கங்கு அங்கு செல்கிறார். அங்கிருந்து கிளம்பி தனது கிராமத்திற்கு செல்லுமாறு அவர்களை வற்புறுத்திய கங்கு, அக்கறையோடு கூறுவதாக காட்டிக் கொண்டார். ஆனால் அவரின் இதயம் துரோகத்தால் இருண்டு கிடந்தது. வாட்டி வதைத்த குளிர், ஈரப்பதம், தனிமையில் இருந்து தப்பிக்க பேரன்களை அழைத்துக்கொண்டு செல்வதாக குஜ்ரியும் ஒப்புக் கொண்டு கிளம்பினார். சில தங்க நாண யங்களுக்காக அவர்கள் இருக்கும் இடத்தை முகாலயர்கள் படைகளுக்கு காட்டிக் கொடுத்தார் கங்கு. குஜ்ரியும், 2 பேரன்களும் தங்கியிருந்த வீட்டின் கதவுகள் விடியற்காலை யில் தட்டப்பட்டன. முகலாய ஆட்சியாளர் வசீர் கானின் படையினர் மூவரையும் சர்ஹிந்திற்கு அழைத்துச்சென்றனர். இத்தகைய துரோகத்தை செய்த சமையல் பணியாளர் கங்கு ஒரு காஷ்மீர் பண்டிட். மூவரையும் அழைத்துச் செல்லும்போது மக்கள் வெகுவாக திரண் டிருந்தனர். பார்ப்பனர் கங்குவின் துரோகத்துக்கு எதிராகவும், முகலாய ஆட்சியாளர் வசீர் கானுக்கு எதிராகவும் முழங்கினர்.

வரலாற்று ஆசிரியர் ஜதுநாத் சர்க்கார், வங்காள - முஸ்லிம்கள் கால வரலாற்றை எழுதியுள்ளார். மராத்திய ஆட்சியாளர்களால் வங்காள இந்துக்கள் அனுபவித்த துன்பங்கள் இந்த நூலில் குறிப்பிடப்பட்டுள்ளன. அத் துயரங்களை நேரில் கண்ட கங்காராம் என்பவரின் பதிவும் இடம்பெற்றுள்ளது. மராத்தியர்கள் தங்கம், வெள்ளியை பறித்துக் கொண்டனர். சிலரது கைகளை வெட்டி னார்கள். காது மற்றும் மூக்கை அறுத்தனர். சிலர் கொல்லப்பட்டனர். பெண்களை இழுத்துச் சென்று பாலியல் வன்கொடுமைகளுக்கு ஆளாக்கினர்” என்றார்.

> *500 ஆண்டுகளுக்கும் மேலான முகலாயர் ஆட்சியில் இந்துக்களை அழித்தொழிப்பு செய்தார்கள் அல்லது கட்டாயப்படுத்தி மதம் மாற்றினார்கள் என்பதுதான் இந்துத்துவ ஆராய்ச்சி யாளர்களின் முதன்மை குற்றச்சாட்டாக உள்ளது. ஆனால் இந்துக்களே பெரும் பான்மையாக இருந்தார்கள் என்பதை மக்கள் தொகை கணக்கெடுப்பு உறுதிப் படுத்துகிறது.*

வரலாற்று தரவுகளின்படி அவுரங்கசீப் ஆட்சிக் காலமானது, ராஜபுத்திரர்கள், சத்ரியர்கள் உள்ளிட்ட உயர்ஜாதி இந்துக்களின் பிற உறுப்பினர்களும் இடம் பெற்றிருந்த ஆட்சியாகவே இருந்தது என்பதை அறிய முடிகிறது. போர்க்களத்தில் சிவாஜியை அவுரங்கசீப் நேரடியாக எதிர் கொண்டதில்லை. ராஜபுத்திர ஆட்சியாளரான அமேர் தனது தளபதி இரண்டாம் ஜெய் சிங்கை (1688-1743) சிவாஜியை வீழ்த்த அனுப்பிவைத்தார். அவருக்கு அவுரங்கசீப் 1699-இல் சவாய் என்ற பட்டத்தை வழங்கி கவுரவித்தார். இதனால் அவர் மகாராஜா சவாய் ஜெய் சிங் என அறியப்பட்டார். இளவரசருக்கான பாரசீக பட்டமான மிர்சா ராஜா பட்டத்தையும் அவுரங்கசீப் அவருக்கு வழங்கினார். இவை மட்டுமல்ல சர்மத்-இ-ராஜாஹா-இ-ஹிந்த் (இந்தியாவின் சிறந்த ஆட்சியாளர்), ராஜ் ராஜேஸ்வர் (அரசர்களின் அதிபதி), ஸ்ரீ சாந்தனு ஜி (முழுமையான மன்னர்) உள்ளிட்ட பட்டங்கள் பிற முகலாய ஆட்சியாளர்களாலும் வழங்கப்பட்டுள்ளது. இந்தப் பட்டங்கள் இன்றும் அவரது சந்ததி யினரால் காட்டப்படுகிறது.

ஷாஜகான் மற்றும் அவுரங்கசீப் அரசில் முதன்மை அமைச்சராக இருந்தவர் ராஜா ருக்நாத் பகதூர். இவர் காயஸ்தர் என்ற சமூகத்தை சேர்ந்தவர். அவரது வழித் தோன்றல்களில் ஒருவர் ராஜா ருக்நாத் பகதூரின் வாழ்க்கை வரலாறு குறித்து எழுதியுள்ளார்.

“ராஜா ருக்நாத் பகதூர் உயர் பதவியை அடைந்துவிட்டார் என்பதால், தனது ஜாதியின் நலன்களைப் பற்றி அவர் கவலைப்படாமல் இல்லை. ராஜா ஒவ்வொருவரையும் அவரவர் தகுதிக்கேற்ப கௌரவப் பதவிகளுக்கும், ஊதியங்களுக்கும் நியமித்தார்; பலருக்கு அவர்களின் சேவைகளுக்காக கௌரவப் பட்டங்களும் மதிப்புகளும் வழங்கப்பட்டன. ஒரு காயஸ்தரும் வேலையில்லாமல் அல்லது தேவைப்படும் சூழ்நிலையில் இருக்கவில்லை” என அவர் குறிப்பிட்டுள்ளார்.

டெல்லியில் கவுரவ மாஜிஸ்திரேட்டாக இருந்த ராய் ஜீவன் லால் பகதூரின் வாழ்க்கை மற்றும் குடும்பம் குறித்த குறிப்பில் இருந்து இத் தகவல்கள் கிடைத்துள்ளன. 1857 காலகட்டத் தில் நடந்த கலகங்கள் குறித்து இவரது குறிப்புகள் விவரிக்கின்றன. சொந்த ஜாதி யினருக்கு ஆதரவாக இருந்த ஒரு அமைச்சரை முகலாய மன்னர் ஆதரித்திருப்பதைத்தான் இவைக் காட்டுகின்றன.

500 ஆண்டுகளுக்கும் மேலான முகலாயர் ஆட்சியில் இந்துக்களை அழித்தொழிப்பு செய்தார்கள் அல்லது கட்டாயப்படுத்தி மதம் மாற்றினார்கள் என்பதுதான் இந்துத்துவ ஆராய்ச்சியாளர்களின் முதன்மை குற்றச் சாட்டாக உள்ளது. ஆனால் இந்துக்களே பெரும்பான்மையாக இருந்தார்கள் என்பதை மக்கள் தொகை கணக்கெடுப்பு உறுதிப்படுத்து கிறது. ஆங்கிலேயே ஆட்சிக்காலத்தில் 1871-72-இல் முதல் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. முகலாயர்கள் ஆட்சி முடிவுக்கு வந்துவிட்ட காலம் அது.

அப்போது இந்தியாவின் மக்கள் தொகை 40.5 கோடி. அதில் இந்துக்கள் மற்றும் சீக்கியர்கள் 73.5 விழுக்காடு. முகமதியர்கள் 21.5 விழுக்காடு. பவுத்தர்கள், ஜெயினர்கள், கிறித்தவர்கள், பார்சிகள் உள்ளிட்ட எஞ்சியவர்கள் 5 விழுக்காடு. கிட்டத்தட்ட 5 நூற்றாண்டுகளாக இஸ்லாமியர்கள் ஆட்சி செய்தும் மதமாற்றம் நடைபெறவில்லை. இந்துக்களை அழிப்பதோ, மதமாற்றம் செய்வதோ முகலாயர்களின் நோக்கமாக இல்லை என்பதை இது தெளிவாக காட்டுகிறது. 2011 மக்கள் தொகைக் கணக்கெடுப் பின்படி இந்துக்கள் 79.80 விழுக்காடாகவும், இஸ்லாமியர்கள் 14.23 விழுக்காடாகவும் உள்ளனர்.

அவுரங்கசீப் அல்லது பிற முஸ்லிம் ஆட்சி யாளர்களின் குற்றங்களை அவர்களின் மதத்தோடு இணைப்பது ஆர்.எஸ்.எஸ்.ஸால் விவரிக்கப்படும் இந்து வரலாற்றின் பதிப்புக்கும் சேர்த்தே கடும் விளைவுகளை ஏற்படுத்தும். ஏனெனில், கௌரவர்கள், புஷ்யமித்ர சுங்கன், இரண்டாம் ஜெய் சிங், மராட்டிய மன்னர்கள், கங்கு பார்ப்பனர்கள் போன்றோரின் குற்றங்களை, அவுரங்கசீப் மற்றும் பிற இஸ்லாமிய ஆட்சியாளர்களுக்கு சொல்வது போல அவரவர் மதத்துடன் இணைத்து பேசினால் நிலைமை மோசமாக மாறும். கடந்த கால தவறுகளுக்காக தற்போதைய சந்ததி யினரைப் பழிவாங்க வேண்டுமென்றால் இந்திய நாகரிகத்தின் தொடக்கத்தில் இருந்தே மீண்டும் தொடங்க வேண்டும். அதில், இந்திய முஸ்லிம் களின் முறை பின்னர் வரும்.

ஆர்.எஸ்.எஸ். மற்றும் பாரதிய ஜனதாவினர் ஒரு உள்நாட்டுப் போரை ஏற்படுத்தும் நிலைக்கு தள்ளும் சூழலையே இத்தகைய பேச்சுக்கள் வெளிப்படுத்துகின்றன. அவர்களுடன் சேர்ந்து, இந்தியர்களில் ஒரு பிரிவினரை மற்றொரு பிரிவினருக்கு எதிராக நிறுத்துவதால், ஜனநாயக-மதச்சார்பற்ற இந்த நாட்டை ஒழிக்க எந்த வெளிநாட்டு எதிரியும் தேவைப்பட மாட்டார்கள்.

(கட்டுரையாளர் சாம்சுல் இஸ்லாம் மத தேசியவாதம் குறித்த ஆராய்ச்சியாளர், டெல்லி பல்கலைக்கழக அரசியல் அறிவியல் பயிற்றுநர்)

**தமிழில்: ர. பிரகாஷ்**

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/22-24 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/22-24
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

## மேட்டூர் பெண்கள் சந்திப்பில் கொளத்தூர் மணி உரை

# பெரியார் காலம் போராட்டக் காலம்; தற்போது அறுவடைக் காலம்

பெண்கள் சந்திப்பு நிகழ்வு 07.08.2022 ஞாயிறு காலை 10.00 மணியளவில் மேட்டூர் தாய்த்தமிழ் தொடக்கப் பள்ளியில் நடைபெற்றது. திருப்பூர் யாழினியின் கடவுள் - ஆத்மா மறுப்பு மற்றும் பாடலுடன் தொடங்கியது. கீதா வரவேற்புரை நிகழ்த்த சுதா நிகழ்வுகளை ஒருங்கிணைத்தார்.முதலில் பெண்கள் சந்திப்பில் கலந்து கொண்ட தோழர்கள் தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டனர்.

தேநீர் இடைவேளைக்கு பிறகு கோவை அமிலா சுந்தர் "அன்னை மணியம்மையார்" பற்றியும், திருப்பூர் சங்கீதா "பெரியாரின் பெண்ணியம்" பற்றியும் உரை நிகழ்த்தினர்.

மதியம் உணவு இடைவேளைக்கு பிறகு 2.30 மணிக்கு இரண்டாம் அமர்வு தொடங்கியது. நிகழ்வில் முத்துக்குமார், கோவிந்தராஜ் ஆகியோர் பெண்ணுரிமை மற்றும் ஜாதி ஒழிப்பு பாடல்களை பாடினர்.

அதனைத் தொடர்ந்து ஆனந்தி "பெண் ஏன் அடிமையானாள்" எனும் தலைப்பிலும், மனோரஞ்சனி "பெண்களும் மூட நம்பிக்கைகளும்" எனும் தலைப் பிலும், வசந்தி "மூவலூர் இராமாமிர்தம்" அம்மையாரைப் பற்றியும், வழக்கறிஞர் கண்ணகி "பெண்ணுரிமைச் சட்டங்கள்" பற்றியும் சிறப்பாக உரை நிகழ்த்தினர்.

பிற்பகல் தேநீர் இடைவேளைக்குப் பிறகு நிகழ்வில் கலந்து கொண்ட பெண்கள் நான்கு குழுக்களாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு குழுவிற்கும் ஒவ்வொரு தலைப்புகள் கொடுக்கப்பட்டு அது குறித்து விவாதிக்கப்பட்டது.

பின்னர் "இன்றைய சூழலில் பெண்களும் வீட்டு வேலைகளும்" என்னும் தலைப்பில் தர்சினியும், "இன்றைய சூழலில் பெண்களின் சமூக பங்களிப்பு" என்ற தலைப்பில் தேன்மொழியும், "இன்றைய சூழலில் பெண்களின் உடையும் ஒப்பனையும்" என்கின்ற தலைப்பில் இளமதியும், "இன்றைய சூழலில் பெண்களின் கல்வியும் விழிப்புணர்வும்" என்கின்ற தலைப்பில் ஆனந்தியும் தங்களது கருத்துக்களை பதிவு செய்தனர்.

அடுத்ததாக தமிழ்நாடு அறிவியல் மன்றத் தலைவர் ஆசிரியர் சிவகாமி தமது உரையில் "பெரியாரியல் தான் பெண்ணடிமை , மூடநம்பிக்கை, ஜாதிய பாகுபாட்டில் இருந்து நம்மை விடுவித்தது என்றும், பெரியார் அவர்களின்



வாழ்க்கை வரலாற்றை கட்டாயம் பெண்கள் அனைவரும் படிக்க வேண்டுமென்றும், சமூக விடுதலையோடு கூடிய பெண் விடுதலையை பெரியார் பேசினார் என்றும், மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கட்டாயம் பெண்கள் சந்திப்பு நிகழ்வுகள் நடத்தப்பட வேண்டுமென்றும்" தனது உரையில் கூறினார்.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி தனது நிறைவுரையில் "கொள்கை வெற்றி என்பது பெண்கள் அதனை ஏற்றுக் கொள்ளும் நிலையில் இருத்தலே ஆகும் என்றும், பெரியாரின் காலம் என்பது போராட்ட காலமாகவும், தற்போது அறுவடைக்காலமாக உள்ளது என்றும், பெரியார் சொல்லிக் கொடுத்த வாய்ப்பாட்டை வைத்துக் கொண்டு நாம் கணக்குகளை போட வேண்டுமென்றும், பெண் எழுத்தாளர்கள் எழுதிய பெண்ணுரிமை பற்றிய புத்தகங்களை படித்து பெண்கள் விவாதிக்க வேண்டுமென்றும், இட ஒதுக்கீடு மூலம் பயன் பெற்றவர்கள் அந்த சமூகத்திற்காக செய்தது என்ன?" என்பதை யோசிக்க வேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

இறுதியாக காயத்ரி நன்றி கூற பெண்கள் சந்திப்பு நிகழ்வு மாலை 6.00 மணிக்கு நிறைவடைந்தது.

நிகழ்வில் கலந்து கொண்ட அனைத்து பெண்களுக்கும் மேட்டூர் வாசகர் வட்டம் கிளை நூலகம் சார்பாக கிட்டு "பெண் ஏன் அடிமையானாள்?" என்ற புத்தகத்தை வழங்கினார். கலந்து கொண்ட தோழர்களுக்கு மதிய உணவாக அசைவ உணவு வழங்கப்பட்டது. நிதழ்வுக்கான ஏற்பாடுகளை மேட்டூர் நகர கழக பொறுப்பாளர்களும், தோழர்களும் சிறப்பாக செய்திருந்தனர்.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

வழக்கை விசாரித்த நீதிபதிகள், வழக்கில் ஆஜரான வழக்கறிஞரிடம், "பொதுநல வழக்கில் தாக்கலாக்கப்பட்ட மனுவில் இணைக்கப்பட்ட ஆவணங்கள் எங்கிருந்து பெறப்பட்டன?" என்ற கேள்வியை எழுப்பினர். ஏனெனில், மதுரையில் தாக்கல் செய்த வழக்கிலுள்ள ஆவணங்களை ஒளிநகல் எடுத்து சென்னையிலும் தாக்கல் செய்திருந்ததனால் இக்கேள்வி எழுந்தது.

மனுதாரர்களால் இதற்கு உரிய பதிலை அளிக்க முடியவில்லை. அதனால், அவர்களை உயர் நீதிமன்றம் கண்டித்தது. மேலும் திருச்சி மாவட்டம் மதுரைக் கிளையின் அதிகார வரையறைக்குள் வருவதனால் வழக்கை உயர் நீதிமன்றத்தின் மதுரைக் கிளைக்கு மாற்றவும் உத்தரவிடப்பட்டது. அவ்வழக்கு மதுரைக் கிளையில் ஏற்கெனவே அந்த சிவசேனா கட்சி தாக்கல் செய்திருந்த வழக்குடன் இணைத்து விசாரிக்கவும் உத்தரவிடப்பட்டது.

மதுரையில் அப்போது மூத்த நீதிபதியாக இருந்த தர்மாராவ் அடங்கிய டிவிஷன் பெஞ்சின் முன் இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது. அவ்விரு வழக்குகளையும் தள்ளுபடி செய்த நீதிமன்றம், "பெரியார் சிலையின் பீடத்தில், 'கடவுளை நம்புபவன் முட்டாள்' என்ற வாசகத்தினால் இறை நம்பிக்கையாளர்களுக்கு மனது புண்படுகின்றது என்ற வாதத்தை ஏற்றுக்கொள்ள முடியாது; வேண்டுமெனில் அப்பிரச்சினை குறித்து சம்பந்தப்பட்ட நபர்கள் தனியாக வழக்கு தொடர வேண்டுமே ஒழிய பெரியார் சிலை வைப்பதைத் தடுக்க முடியாது" என்று கூறிவிட்டது (19.2.2007).

**பன்முகத்தன்மையை ஏற்க வேண்டும் : உயர் நீதிமன்றத்தின் சென்னை அமர்விலும் மதுரை அமர்விலும் அப்போது ஒரே கட்சிக்கு இரு வேறு வழக்குகளைப் போட்டு வாதாடிய வழக்கறிஞர் ஜி.ஆர்.சுவாமிநாதன் (இப்போது அவர் மதுரைக் கிளையில் நீதிபதியாக இருக்கிறார்).**

இதற்கிடையில் பெரியார் சிலை நிறுவப்பட்டதற்கு எதிராக இந்து மக்கள் கட்சி அறிவித்த போராட்டத்தையும், மூட நம்பிக்கை ஒழிப்புப் போராட்டம் என்று ஆர்ப்பாட்டம் நடத்திய திராவிடர் கழகத்தின் போராட்டத்தையும் தடைசெய்யும்படி கோரி இந்திய மக்கள் மன்றத்தின் தலைவர் கிருஷ்ணகுமார் பொதுநல வழக்கொன்றைத் தாக்கல்செய்தார். அவ்வழக்கையும் சென்னை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

பெரியார் சிலை இருப்பதனால் மனது புண்படுகிறது என்று தற்பொழுது சொல்லிவரும் அண்ணாமலைகளும், ஹெச்.ராஜாக்களும் தொடர்ந்து பிரச்சாரம் செய்துவந்தாலும், 15 ஆண்டுகளுக்கு முன்னால் மனதைப் புண்படுத்தும் என்று நம்புபவர்கள் தனியாக வழக்கு தொடர்ந்து நிவாரணம் தேட வேண்டும் என உயர் நீதிமன்றம் கூறியும், மறுபடியும் பெரியார் சிலையை அகற்ற வேண்டும் என்று வன்முறைப் பிரச்சாரத்தை அவிழ்த்துவிடுவது எவ்விதத்தில் நியாயம்? அவர்களுக்கு நீதிமன்ற நடைமுறையில் நம்பிக்கையில்லை என்பதைத்தான் அது காட்டுகிறது.

இந்த நேரத்தில் வேறொரு தகவலையும் இங்கே பதிவுசெய்வது அவசியம். கோயில் கோபுரத்துக்கு அருகே உள்ள உணவு விடுதியொன்றில், 'ஸ்ரீகிருஷ்ணய்யர் பிராமணாள் கபே' என்று போடப்பட்டிருப்பதை எதிர்த்து பெரியார் திராவிடக் கழகம் நடத்திய போராட்டத்தில் சிலர் கைதுசெய்யப்பட்டனர். அதை எதிர்த்துப் போடப்பட்ட வழக்கை ஏற்றுக்கொண்ட நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் தனது தீர்ப்பில் மதுரை நகரத்தில், 'கோனார் மெஸ்', 'முதலியார் இட்லி கடை' என்று இருப்பதைச் சுட்டிக் காட்டியதுடன், தான் மாணவர் பருவத்தில் 'ரெட்டியார் மெஸ்'ஸில் உணவு அருந்தியதாகவும் பதிவுசெய்தார்.

இப்படி சுவாமிநாதனே கூறிய பன்முகத்தன்மையை ஏற்றுக்கொள்வதுதான் அண்ணாமலைகளுக்கு அழகு என்பதைக் கூறவும் வேண்டுமா?

**முன்னாள் நீதிபதி கே.சந்துரு (அருஞ்சொல்) இணையதளத்தில் எழுதியது**

# இரசாயன விநாயகன் சிலைகளைக் கரைப்பதைத் தடுக்க அமைச்சரிடம் மயிலாடுதுறை கழகம் மனு




மயிலாடுதுறையில், தமிழ்நாடு அரசு மற்றும் உயர்நீதி மன்ற உத்தரவை மீறி விநாயகர் சிலைகள் பிளாஸ்ட ஆப் பாரீஸ் என்ற வேதிப் பொருளால் செய்யப்பட்டு வர்ணம் பூசி விநாயகர் சதுர்த்திக்காக தயாராகி வருகின்றன.

நீர் நிலைகளை மாசுபடுத்தும் இந்தச் செயலை தடுத்து நிறுத்த கோரி 05.09.2022 அன்று திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் வீ.மெய்யநாதனிடம் கோரிக்கை மனு கொடுக்கப்பட்டது. அப்பொழுது பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா முருகன் உடனிருந்தார்.

இந்நிகழ்வில் திவிக மாவட்ட தலைவர் மகாலிங்கம், செயலாளர் மகேஷ், அமைப்பாளர் செந்தில்குமார், பொருளாளர் விஜயராகவன், நகர தலைவர் நாஞ்சில் சங்கர், செயலாளர் நடராஜன், தோழர்கள் தில்லைநாதன், கார்த்திக், ராகவன், வழக்குரைஞர் சந்தோஷ்குமார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இது தொடர்பாக மாவட்ட ஆட்சியர் அலுவலகம், காவல்துறை கண்காணிப் பாளர், இந்துசமய அறநிலையத் துறை இணை ஆணையர் மற்றும் வட்டார போக்குவரத்து அலுவலகம் ஆகியோரிடம் புகார் மனு அளிக்கப்பட்டது.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 12th August 2022

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN